# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 07 | சைவநெறி<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

01. கடவுள் ஒருவரே மெய்ப்பொருள் என்பதை விளக்கும் கதை
    1) தாயுமானவர் கதை 2) கிரிசாம்பாள் கதை
    3) சிபிச்சக்கரவர்த்தி கதை 4) அரிச்சந்திரன் கதை

02. நாம் விலக்க வேண்டிய தீய பழக்கங்களுள் ஒன்று
    1) கொல்லாமை 2) கள்ளாமை 3) பொய்ம்மை 4) வாய்மை

03. சாமகானம் பாடி இறைவனையே மயங்கச் செய்தவன்
    1) பாணபத்திரன் 2) நாரதர் 3) பாணர் 4) இராவணன்

04. இறைவனுக்கு அபிடேகம் செய்யப்படும் பொருள்களுள் ஒன்று
    1) பூ 2) பால் 3) பொங்கல் 4) சாமரை

05. "மனையடி சாஸ்திரம்" எனும் நூலில் கூறப்படும் விடயம்
    1) கோயில் அமைக்கும் முறை 2) விக்கிரகங்கள் அமைக்கும் முறை
    3) வீடு அமைக்கும் முறை 4) தேர் அமைக்கும் முறை

06. இறைவனைத் திரிகரணங்களால் மெய்யன்போடு வழிபடவேண்டும். திரிகரணங்களாவன
    1) மனம், வாக்கு, காயம் 2) ஆணவம், கன்மம், மாயை
    3) அருவம், உருவம், அருவுருவம் 4) பதி, பசு, பாசம்

07. "வரைகெழு மகள் ஓர் பாகமாய்ப் புணார்ந்த வடிவினர்"
    1) கணபதி 2) சிவபெருமான் 3) விஷ்ணு 4) முருகன்

08. மாபலிச் சக்கரவர்த்தி தன் உடல் வெப்பநிலை நீங்க அனுட்டித்த விரதம்
    1) கந்த சஷ்டி 2) விநாயக சஷ்டி 3) சிவராத்திரி 4) திருக்கார்த்திகை

09. பின்வருவனவற்றுள் பிற்காலத் தோத்திரப் பாடலாக அமைவது
    1) "இறவாமல் பிறவாமல்......." 2) "விருது குன்ற மா......"
    3) "நங்கடம்பனைப் ......." 4) "பாலுக்குப் பாலகன் ......."

10. குங்குலியக்கலய நாயனார் தூபமிடும் திருப்பணி செய்த தலம்
    1) திருவொற்றியூர் 2) திருவாரூர் 3) திருக்கடவூர் 4) திருப்புன்கூர்

11. வீடு கட்டுவதற்கு, முதலில் செய்ய வேண்டியது
    1) அளவைத் தீர்மானித்தல் 2) நிலத்தைத் தெரிதல்
    3) அத்திபாரம் இடுதல் 4) கூரை வைத்தல்



kalvi.lk

12. மாணிக்கவாசகருக்கு "தென்னவனபிரமராஜன்" எனும் பட்டப் பெயரைச் சூட்டியவர்
   1) அநபாயச்சோழன்  2) அரிமர்த்தன பாண்டியன்
   3) மகேந்திரவர்மன்  4) சேரமான்பெருமான்

13. சுவாமி விபுலானந்தரால் அமைக்கப்பட்ட பாடசாலைகளுள் ஒன்று
   1) திருகோணமலை இந்துக் கல்லூரி  2) திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி
   3) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி  4) கோப்பாய் சைவப்பிரகாச வித்தியாசாலை

14. புதுமனைக்கு காவல் செய்யப் பயன்படுத்தும் காய்
   1) சர்க்கரைப் பூசணி  2) சுரைக்காய்  3) வாழைக்காய்  4) நீற்றுப் பூசணி

15. குங்குலியக்கலய நாயனார் காலத்தில் வாழ்ந்த நாயன்மாருள் ஒருவர்
   1) சுந்தரமூர்த்திநாயனார்  2) கண்ணப்பநாயனார்
   3) திருஞானசம்பந்தர்  4) மெய்ப்பொருள்நாயனார்

16. திருநாவுக்கரசர் கைலைக் காட்சியைக் கண்ட இடம்
   1) திருவீழிமிழலை  2) திருமறைக்காடு  3) திருப்பைஞ்நீலி  4) திருவையாறு

17. "தில்லைவாழ் அந்தணர்..." எனும் பாடல் இடம்பெற்றுள்ள நூல்?
   1) திருத்தொண்டர்தொகை  2) திருக்குறுந்தொகை
   3) திருத்தாண்டகம்  4) திருவிருத்தம்

18. தேர் வடிவில் அமைந்த தலம்
   1) சிதம்பரம்  2) மேலைக்கடம்பூர்  3) திருவண்ணாமலை  4) திருமருகல்

19. திருச்சிற்றம்பலம் சொல்லப்படுவது
   1) திருப்புகழ் பாடும் போது  2) திருமுறை ஓதும் போது
   3) சகலகலாவல்லி மாலை ஓதும் போது  4) தேவாரம் பாடும் போது

20. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்துறைப் பேராசிரியராக விளங்கியவர்
   1) சுவாமி விபுலானந்தர்  2) ஆறுமுகநாவலர்
   3) பேராசிரியர் கைலாசபதி  4) பேராசிரியர் சிவலிங்கராஜா

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி, பாடியவர், தலம் என்பவற்றையும் குறிப்பிடுக.
   1) "நத்தார் படை ......"  2) "அம்மையே அப்பா..."
   3) "கற்றவர் விழுங்கும்...."  4) "வேத நெறி....."

02. "கல்வியையும் ஒழுக்கத்தையும் போதிக்கும் நிறுவனம் பாடசாலையாகும்."
   1) பாடசாலையில் நீர் கற்றுக் கொண்ட நற்பண்புகள் எவை?
   2) நீர் கூறிய அல்லது கேட்ட நற்சிந்தனை ஒன்றை எழுதுக.
   3) நீர் பாடசாலையில் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் எவை?
   4) பாடசாலைக் காலைக் கூட்டத்தில் பங்குபற்றத் தவறும் மாணவனுக்கு நீர் கூறும் அறிவுரை யாது?

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)



kalvi.lk

03. "செயற்கரிய செயலைச் செய்த பெரியார்கள் நாயன்மார்கள்"

1) சம காலத்தில் வாழ்ந்த சமய குரவர் யாவர்?

2) அவர்கள் இணைந்து செய்த பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

3) சுந்தரமூர்த்திநாயனார் நிகழ்த்திய அற்புதங்கள் மூன்றினை எழுதுக.

4) மாணிக்கவாசகருக்கு இறைவன் உதவிய சந்தர்ப்பங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)

04. "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்"

1) பயன் கருதாமல் இறை அர்ப்பணமாகச் செய்யப்படும் கிரியை எவ்வாறு அழைக்கப்படும்?

2) ஆலயத்தில் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டிய இடம் எது?

3) நீர் சண்டேஸ்வரரை எவ்வாறு வழிபாடு செய்வீர்?

4) நீர் செய்யும் ஆலயத் தொண்டுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)

05. "விரதங்கள் உடல், உள, ஆன்மிக பயன்களைத் தருகின்றன.

1) வார விரதங்கள் இரண்டினை எழுதுக.

2) வைகாசி விசாகம், பங்குனி உத்தரம் ஆகிய தினங்கள் விசேடம் பெற்றமைக்கான காரணங்களை எழுதுக.

3) விநாயகர் சதுர்த்தி விரதம் அனுட்டிப்போர் பெறும் பலன்கள் மூன்றினை எழுதுக.

4) நீர் அனுட்டிக்கும் விரதம் எது? அதனை எவ்வாறு அனுட்டிப்பீர்?

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)

06. "பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு, பாசம், அநாதி"

Education
கல்வி
අධ්‍යාපන

1) சைவ சித்தாந்தம் கூறும் உண்மைப்பொருள்கள் எவை?

2) அவற்றின் பொதுவான இயல்பு ஒன்றினை எழுதுக.

3) உயிர்களின் இறுதி இலட்சியம் எது? அவை ஏன் பிறவிகளை எடுக்கின்றன?

4) பதியின் இயல்புகள் மூன்றினை எழுதுக.

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1) நல்லவற்றைக் கடைப்பிடிப்போம்

2) சுவாமி விபுலானந்தர்

3) ஆடிப்பிறப்பு

4) திருமுறை

(5 + 5 =10 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**